## கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி 9.69% உயர்வு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் பல்வேறு முயற்சிகளுக்குக் கிடைத்திருக்கும் சான்று!

## தூத்துக்குடியில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**தூத்துக்குடி, ஏப்.7**

**நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (05.04.2025) தூத்துக்குடி யில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:-**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில், தமிழ்நாடு மிக முக்கியமான பங்களிப்பினை வகிக்கிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கு நாம் 9 சதவீதம் அளித்துக் கொண்டு வரக்கூடிய நிலையில், இன்றைக்கு ஒன்றிய அரசினுடைய Statistics and Programe Implementation துறையின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய ஆய்வறிக்கை வந்திருக்கிறது.

அந்த ஆய்வறிக்கையின் படி, நிலைத்த விலை விகிதங்களில் (constant prices) தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி என்பது இன்றைக்கு 9.69 சதவீதமாக அதிகரித்திருக்கிறது என்று அந்த அறிக்கை தெரிவித்திருப்பது மிக முக்கியமான மிக சிறப்பான ஒன்று என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

9.69 சதவிகிதம் என்பது கடந்த 10 ஆண்டுகளில் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த வளர்ச்சி நிச்சயமாக எட்டப்பட முடியாத ஒரு வளர்ச்சி. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தெளிந்த வழிகாட்டுதல்கள். முதலமைச்சர் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் எடுத்து இருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகளின் காரணமாக, நமக்கு இந்த மிகப்பெரிய வளர்ச்சி கிடைத்திருக்கிறது.

அதன் வகையில் நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், கடந்த ஆண்டில், நம்முடைய பொருளாதாரம் என்பது 15.73 லட்சம் கோடியாக இருந்த அந்த பொருளாதாரம், இன்றைக்கு 17.23 லட்சமாக இந்த ஆண்டிலே அது உயர இருக்கின்றது.

இந்த 9.69 சதவிகிதத்தில்



(constant price) வரக்கூடிய இந்த வளர்ச்சி என்பது நீங்கள் nominal priceலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால், அதாவது பணவீக்கத்தை (inflation) உருவாக்கி. நீங்கள் எடுத்துக் கொண்டால் அது 14 சதவீதமாக இருக்கும். பணம் நீக்கம் இல்லாமல் அந்த constant priceல் எடுத்துக்கொண்டால் 9.69 சதவீதமாகும்.

இது தமிழ்நாட்டில் அரசு இந்த ஆண்டு நம்முடைய பட்ஜெட்டைக் கொடுப்பதற்கு முன்பாக Economic Survey ரிப்போர்ட் ஒன்றை நாம் வெளியிட்டிருந்தோம். அந்த Economic Survey ரிப்போர்ட்டில் நாம் என்ன வளர்ச்சி விகிதத்தை குறிப்பிட்டிருந்தோமோ அந்த வளர்ச்சி விகிதத்தை தொடக்கூடிய அளவிற்கு இது வந்திருக்கிறது.

இந்த வளர்ச்சி விகிதம் என்பது அதில் சுட்டிக்காட்டியிருப்பது போல, 8 சதவிகிதம் நாம் அதை சுட்டிக்காட்டி இருந்தோம். ஆனால், இன்றைக்கு 9.69 சதவீதமாக அந்த வளர்ச்சி விகிதமாக கூடியிருக்கிறது. அதைப்போல, ரங்கராஜன் அவர்கள் ஒரு சிறந்த பொருளாதார நிபுணர், அதைப்போல, கே.ஆர்.சண்முகம் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சொல்லி இருப்பது போல, அது 9.3 சதவீதமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதையும் சிறப்பாக செய்து நாம் 9.69 சதவிகிதமாக நாம் இன்றைக்கு வந்திருக்கிறோம்.

இதில் மூன்று முக்கியமான துறைகளில் முதலாவதாக வகிக்கக்கூடிய விவசாயம், இரண்டாவது துறையாக இருக்கக்கூடிய நம்முடைய உற்பத்தித் துறையாக இருந்தாலும் சரி அல்லது மூன்றாவது துறையாக இருக்கக் கூடிய நம்முடைய சர்வீசஸ் துறையாக இருந்தாலும் சரி, இவற்றில் விகிதங்களை பார்க்கின்றபோது சர்வீசஸ் துறை நமக்கு மிகுந்த பங்களிப்பினை அளித்திருக்கிறது.

அதைப்போல, நம்முடைய உற்பத்தித் துறையும் அதற்கான குறிப்பிடத் தகுந்த அளவில் ஒரு பங்களிப்பை அளித்திருக்கிறது. இந்த வளர்ச்சி என்பது இந்த விகிதத்தில் நாம் செல்கிறோம் என்று சொன்னால், நாம் ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, நாம் 2030-ஆம் ஆண்டில் ஒரு ட்ரில்லியன் டாலர் economyயை நாம் பெறக் கூடிய அளவிற்கு இந்த வளர்ச்சி விகிதம் நம்மை இட்டுச் செல்லும்.

இது முதலமைச்சர் அவர்களுடைய Vision - அவருடைய தொலைநோக்குப் பார்வை. அவர் எடுத்திருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகள் தமிழ்நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்கள் செய்திருக்கக் கூடிய தொழில் முதலீடுகளை நம்முடைய நாட்டுக்கு கொண்டு வருவது உள்ளூரிலேயே தொழில் செய்வதை மிகுந்த எளிமைப்படுத்துகின்ற வகையில் அவர் எடுத்திருக்கின்ற முயற்சிகளுக்கு இது மிகுந்த ஒரு சான்றாக அமைந்திருக்கிறது.

மக்களுடைய நலவாழ்வில் அக்கறை கொண்டு அவர் எடுத்திருக்கக் கூடிய இந்த முயற்சிகள் எல்லோரையும் ஒருங்கிணைத்திருக்கக் கூடிய அந்த வளர்ச்சி என்பதும் இந்த பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோளாக மாறி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதன் வாயிலாக, நம்முடைய ஒட்டுமொத்த பொருளாதாரம் என்பது இன்றைக்கு மிகப்பெரிய வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை செய்தியாளர்களை சந்திக்கும் வாயிலாக நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.04.2025 | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் | சேலம் சாலை, குமாரபாளையம் | **திருச்சி சிவா** எம்.பி., கா.பிரதீபா |
| 2 | 07.04.2025 | கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | அறிஞர் அண்ணா விளையாட்டரங்கம் அருகில், வடசேரி | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, ஜெ.ஜெபின் |
| 3 | 07.04.2025 | சென்னை வடக்கு | இராயபுரம் | பாலு முதலி தெரு, இராயபுரம் | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 4 | 08.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 5 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 6 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**, க.நந்தகுமார் |
| 7 | 12.04.2025 | கரூர் மாவட்டம் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 8 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 9 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | மருத்துவர் ப.மீ.யாழினி, ச.ஐஸ்வர்யா |
| 10 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 11 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 12 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்**, க.செல்வமணி |
| 13 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

அன்பகம், சென்னை – 18.

நாள் : 04–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**

செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி